DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 250 - 2023 |
| Police Station | Manamadurai PS |
| Deposition of Witness for | LW.5 /PW.5 |
| Name | ரமேஷ் |
| Father's/Husband's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused Absent. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.09.2025 at **11**.50 a.m

**முதல் விசாரணை:**

எதிரி செல்லக்கண்ணனை எனக்கு தெரியாது. நான் மானாமதுரையில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். 23.11.2022 அன்று நான் செங்கல் காளவாசலில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். மாலை 3 மணியளவில் அப்போது திடீரென்று சத்தம் கேட்டது. நான் பள்ளத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தேன் மேட்டிற்கு வந்து பார்த்த போது ரோட்டின் மேல் பைக்கில் வந்தவர் விழுந்து அந்த இடத்தில் இரத்தம் படிந்திருந்தது. கூட்டமாக நின்றுகொண்டிருந்தார்கள். விழுந்து கிடந்தவர் பெயர் எனக்கு தெரியாது. நான் அங்கு போவதற்கு முன்பே காயம்பட்டவரை தூக்கிவிட்டார்கள். தலையாரி பெருமாள் என்பவர் அங்கிருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். காயம்பட்டவருக்கு எந்தெந்த இடத்தில் காயம் ஏற்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை :—**

என்னை விசாரித்த போலீஸ் அதிகாரியின் பெயர் எனக்கு தெரியாது. சார்பு ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர் இருந்தார்கள். சம்பவம் நடந்து ஒரு வருடம் கழித்து என்னை விசாரித்தார்கள். அய்யாக்கண்ணு மகன் தங்கசாமி என்பவர் எனது அப்பா. போலீசார் விசாரித்த போது நான் முதல் விசாரணையில் கூறிய விபரத்தை தான் போலீசாரிடம் கூறினேன்.

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை